1973 மார்ச் 26]

போக்குவரத்து விரைவு வண்டி.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளிக்கும் ஈரோட்டிற்குமிடையே சென்று வந்த தமிழக அரசு போக்குவரத்து விரைவு வண்டி (வழி—கரூர்) தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) வசூல் மிகக் குறைவாக இருந்தது ; பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை 40 சதவீதமே இருந்தது.

Tourist Taxis

* 273 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether all the Southern States have agreed to bring Tourist Taxis under single-point tax ; and

(*b*) if so, the details thereof ?

சுற்றுலாப் பயணிகள் மோட்டார் வண்டிகள்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலாப் பயணிகள் மோட்டார் வண்டிகளை ஒருமுனை வரியின் கீழ்க் கொண்டு வர, தெற்கு மாநிலங்கள் அனைத்தும் ஒப்புக்கொண்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர் ஆகிய தென் மாநிலங்களில் மாநிலம் ஒவ்வொன்றும், மேலொப்பமின்றி ஒருமுனை வரியில் சுற்றுலா டாக்சிகள் நூறு விடலாம் என 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அன்று கோயம்புத்தூரில் நடந்த தென் மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : விளுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]